[1979 நவம்பர் 5

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்விக்கு நான் முன்பே பதில் அளித்திருக்கிறேன். எந்தெந்த நூல்கள் பிற மொழிகளிலே இருந்து தமிழிலே மொழி பெயர்க்கப் பட்டுள்ளன, அல்லது எந்தெந்த நூல்கள் தமிழிலே இருந்து பிற மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்ற குறிப்புக் களைப் பற்றி, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துக் கொடுக்க முடியும். உறுப்பினர் அவர்களின் மேலான ஆலோ சனையும் அரசின் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, நாடோடி மன்னனிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் வாய்ப்பாட்டுப் பாடி னார்களா: அல்லது வாயசைத்தார்களா?

[பதில் இல்லை.]

மதுரை நகரில் கலைக் கல்லூரிகள்.

*வினா எண். 109 திரு. என். லட்சுமிநாராயணன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) மதுரை மாநகரில் புதிதாக கலைக் கல்லூரிகள் நிறுவ அனுமதி கோரி மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

(இ) அவற்றின் விவரம் யாது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) :

(அ) ஆம்.

(ஆ) ஒன்று.

(இ) இராணி மெய்யம்மை ஆச்சி (செட்டிநாடு) நினைவு அறக் கட்டளையிலிருந்து, புதிதாக 1979–80-ம் கல்வி ஆண்டில் ஒரு பெண்கள் கல்லூரி திறக்க மனு வந்துள்ளது. இது பரிசீலனையிலுள்ளது.

திரு. நா. லட்சுமிநாராயணன் : பேரவைத் தலைவர் அவர் களே, மதுரை மாநகராட்சி கல்லூரி நடத்த முன்வந்தால் அந்த மனு பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்றாண்டு காலமாக கல்லூரிகளை துவக்க அரசு அனுமதி அளிக்கவில்லை. 1979-80ம் ஆண்டில் பல மனுக்கள் புதிய கல்லூரிகளைத் துவக்க வந்துள்ளது. அதில் ஒன்றுதான் இராணி மெய்யம்மை ஆச்சி (செட்டிநாடு) நினைவு அறக்கட்டளையிலிருந்து ஒரு பெண்கள் கல்லூரி திறக்க

வந்துள்ள மனு என்று ஏற்கனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல், மதுரை மாநகராட்சியிலிருந்து மனு வந்தால் அரசு பரிசிலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கல்லூரிகள் அமைக்கவேண்டும் என்றால், அது பல்கலைக் கழகங்களுக்கு இடையே எவ்வளவு தூரத்திற்குள் அமைக்கப்பட வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றதா? அந்த நியதிகளைப் பின்பற்றி ஆரம்பிக்கிறபோது, சிதம்பரத்திற்கு அருகாமையில் உள்ள ஸ்ரீமுஷ்ணம், சேத்தியாதோப்பு ஆகிய கிராமப்புறங்களில் ஆரம்பிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மதுரை மாநகரில் புதிதாக கலைக் கல்லூரிகள் நிறுவ அனுமதி கோரி மனுக்கள் ஏதேனும் வந்துள்ளதா என்பதைப் பற்றியதாகும். உறுப்பினர் விரும்புகிற தகவல்களை அறிய தனியாகக் கேள்வி போட்டால், சேகரித்துக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கிற கலைக்கல்லூரிகளில் மாணவர்கள் சேருகிற நிலைமை குறைந்துள்ள காரணத்தால், புதிதாகக் கல்லூரிகளைத் துவக்க தனியாரிடமிருந்து கோரிக்கைகள் வருகிறபோது, அவர்களை தொழில் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு அரசு போதிய ஊக்கம் அளிக்கவும், உதவி செய்யவும் முன் வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச்செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற யோசனையை அரசு கருத்தில் கொண்டு ஏற்கனவே செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள கலைக்கல்லூரிகளில் போதிய மாணவர்கள் சேருகிற வகையில் ஊக்கம் அளிக்க அரசிடம் நிரந்தரத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் விவரமாக தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,